# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த "கத்ரி தயாராம் சிவ்ஜி" கட்டளை

**ந.க. எண் 4787 / 1431 / பி3(3) / நாள்.17.06.2022**

**கட்டளைக்குச் சொந்தமான மனைகள் வாடகைக்கு விடுதல்**
**வாடகைக்கான பொது ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அறிவிப்பு**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுடன் இணைந்த "கத்ரி தயாராம் சிவ்ஜி" கட்டளைக்குச் சொந்தமான கீழ்க்காணும் புல எண்கள் படியான காலிமனைப் பகுதிகள் வருகிற **04.07.2022**ஆம் தேதியன்று **மாலை 4.00** மணியளவில் பொது ஏலத்தில் மனை/வணிகம் மாத வாடகை அடிப்படையில் மறு டெண்டர் / பொது ஏலத்தில் விடப்படவுள்ளது. மறு டெண்டர் படிவ விலை **ரூ.500/-** திருக்கோயில் அலுவலகத்தில் **03.07.2022 மாலை 5.00 மணி** வரை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

***ஏலம் நடைபெறும் இடம் – திருக்கோயில் ரெங்கவிலாச மண்டபம்***

*டெண்டர் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்* **04.07.2022 நேரம் 3.30 மணி பிற்பகல்**

*பொது ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்* **04.07.2022 நேரம் 4.00 மணி பிற்பகல்**

| வ. எண் | T.S. No. | Ward | Block | ஏக். செ. | மொத்த ச.அடி | பொதுமக்கள் அளித்த சந்தை மதிப்பு மனை வாடகை ஒரு சதுர அடிக்கு | மாத வாடகை ஆரம்ப கேள்வி ரூ. | பிணை வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2173 | B | 49 | 0.58 | 25264 . 40 | ரூ.2.50 | 63,161/- | 2,50,000/- |
| 2 | 2188 | B | 49 | 0.24 | 10454 . 40 | ரூ.2.50 | 26,136/- | 1,00,000/- |
| 3 | 2187 | B | 49 | 0.35 | 15246 . 00 | ரூ.2.50 | 38,115/- | 1,50,000/- |
| 4 | 2369 | B | 52 | 0.35 | 15246 . 00 | ரூ.2.50 | 38,115/- | 1,50,000/- |
| 5 | 2174 | B | 49 | 0.58 | 25264 . 40 | ரூ.2.50 | 63,161/- | 2,50,000/- |
| 6 | 7 | C | A | 0.70 | 30492 . 00 | ரூ.3/- | 91,476/- | 3,50,000/- |
| 7 | 2172 | B | 49 | 1.00 | 43560 . 00 | ரூ.3/- | 1,30,680/- | 4,00,000/- |

## நிபந்தனைகள்

1. மாத வாடகையை அடிப்படையாகக் கொண்டு 5 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் மறு டெண்டர் / பொது ஏலம் விடப்படும். மாத வாடகை ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்வு செய்யப்படும். மறு டெண்டர் / ஏலதாரர் மேற்படி புல எண்களின்படியான இடங்களைப் பார்வையிட்டு மறு டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொண்டதாக கருதப்படும்.
2. மறு டெண்டர் / பொது ஏலத்தில் உயர்ந்த கேள்விதாரருக்கு ஏலம் உறுதி செய்யப்படும்.
3. மறு டெண்டர் / பொது ஏலத்தினை ஏற்கவோ, நிராகரிக்கவோ வேறு தேதிக்கு மாற்றவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரணமுண்டு.
4. குறிப்பிட்டுள்ள மாத வாடகையை அடிப்படையாக கொண்டு ஏலம் தொடங்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் **ரூ.1000/–** மடங்கில் ஏல கேள்வி கேட்க வேண்டும்.
5. பொது ஏலம் / மறு டெண்டர் அங்கீகாரம் சென்னை இந்துசமய அறநிலையத்துறை ஆணையரின் ரத்து அங்கீகாரத்திற்குட்பட்டது.
6. மேற்கண்ட ஒவ்வொரு புல எண்களுக்கும் தனியாக மறு டெண்டர் / பொது ஏலம் விடப்படும். அதன் எதிரில் குறிப்பிட்டுள்ள மறு டெண்டர் / பொது ஏலகால டெபாசிட் தனித்தனியாக செலுத்தி மறு டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
7. மறு டெண்டர் கொடுப்பவர்கள் **"Administrator Sri Khadri Dayaram Shivji Kattalai"** என்ற பெயரில் டெபாசிட் தொகைக்கு வங்கி வரைவோலை திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி டெண்டர் கொடுக்க வேண்டும்.
8. மறு டெண்டர் கவரில், பெறுநர் முகவரியாக "Administrator, Sri Khadri Dayaram Shivji Kattalai", Sri Ranganathaswamy Temple, Srirangam" என்ற முகவரிக்கும், மறு டெண்டர் வழங்குபவர் பெயர், முழு முகவரி, கைப்பேசி எண் குறிப்பிட்டு மறு டெண்டர் வழங்க வேண்டும். ஏலம் / மறு டெண்டரில் கலந்து கொள்பவர்கள் முகவரிக்கான சான்று (Aadhar Card) இணைக்கப்பட வேண்டும். மறு டெண்டர் கவரின் மேல் எந்த வரிசை எண் என்றும், எந்த புல எண்ணிற்கு மறு டெண்டர் வழங்கப்படுகிறது என தெளிவாக குறிப்பிட வேண்டும்.
9. மேற்படி மறு டெண்டர் கோருபவர் எந்தவித தொழில் முறைக்கு பயன்படுத்த ஏலம் கோருகிறார் என்பதை தெரிவிக்க வேண்டும்.
10. மறு டெண்டர் கொடுத்தவர்களும், பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏல கேள்வி கேட்கலாம்.

11. பொது ஏலம் முடிந்து, உயர்ந்த கேள்விக்குப் பிறகு, யாரும் கேள்வி கேட்காத நிலையில், டெண்டர் திறக்கப்படும். மறு டெண்டர் / பொது ஏலத்தில் உயர்ந்த கேள்வி இறுதி செய்யப்படும்.
12. பொது ஏலம் / மறு டெண்டரில் ஏலம் முடிவு செய்யப்பட்டு, ஆணையர் உத்திரவு வரப்பெற்ற நாள் முதல், ஏலத்திற்குரிய இடம் ஏலம் உறுதி செய்யப்பட்டவரிடம் ஒப்படைக்கப்படும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் மறு டெண்டர் / பொது ஏல டெபாசிட் தொகை போக, **இரண்டு ஆண்டுகளுக்குரிய மாத வாடகை** தொகையினைக் கணக்கிட்டு ஏல தேதியன்றே செலுத்த வேண்டும். அதேபோன்று ஒவ்வொரு அடுத்த பசலி (ஜூலை) ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னரே 5% வாடகையை உயர்வு செய்து அடுத்த ஒரு ஆண்டுக்குரிய வாடகையை செலுத்திவிட வேண்டும்.
13. பொது ஏலம் 5 ஆண்டுக்கு மனை/வணிகம் மாத வாடகை குத்தகை அடிப்படையில் விடப்படும். ஏலம் உறுதி செய்து, அலுவலக உத்திரவு பெற்றபின், ஏலதாரர் ₹.50/– க்கான அரசு முத்திரைத்தாளில் திருக்கோயில் வாசகப்படி ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுத்த பின்னரே மேற்படி இடத்தினை அனுபவித்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படும்.
14. பொது ஏலம் / மறு டெண்டர் ஆணையரால் இரத்து செய்யப்பட்டால் ஏலகால டெபாசிட் மற்றும் 2 ஆண்டுக்கான உரிமத் தொகைக்கு வட்டித்தொகை வழங்கப்பட மாட்டாது.
15. குடிநீர், மின்சார வசதி அமைக்க, திருக்கோயில் ஒப்புதல் பெற்று ஏலதாரர் தங்களது சொந்த செலவில் அமைத்துக் கொள்ள வேண்டும்.
16. மின் இணைப்பு திருக்கோயில் / கட்டளை பெயரில் மட்டுமே பெறப்பட வேண்டும். ஏலதாரர் பெயரில் வழங்கப்படமாட்டாது. மின் இணைப்பிற்கான டெபாசிட், ஏலதாரர் சொந்த செலவில் செலுத்த வேண்டும். மின் கசிவு, மற்றும் தீ பிடித்தல் போன்ற அசாதாரணமான நிகழ்வுகளுக்கு ஏலதாரரே பொறுப்பாக்கப்படுவார். மேலும் அரசு விதிகளின்படி தீ தடுப்பு, சுகாதாரம், உணவு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தொழில் தொடர்புடைய சான்றுகள் ஆகியவை ஏலதாரர் பொறுப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுபோல விபத்து, காப்பீடு, உயிர் காப்பீடு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு சான்றுகள் பெறாமலும், காப்பீடு செய்யாமலும், இழப்புகள் ஏற்பட்டால் அவற்றிற்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பேற்காது.
17. ஏலம் எடுத்தவர், மேற்படி மனையில் நிரந்தரமான கட்டுமான பணிகள் மேற்கொள்ளக்கூடாது. மேற்கூரை அமைத்தல், தற்காலிக சுற்றுச்சுவர் அமைத்தல், தளம் அமைத்தல் போன்றவற்றை திருக்கோயிலுக்கு முன்னரே பொறியாளர்

மதிப்பீட்டுடன் தெரிவித்து, அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாநகராட்சி அனுமதி திருக்கோயில் / கட்டளை பெயரில் ஏலதாரர் சொந்த செலவில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

18. ஏலதாரர் ஏலம் எடுத்த இடங்களில் சட்டவிரோதமான மற்றும் இந்துமத உணர்வுகளுக்கு விரோதமான மணல்குவாரி, மதுகடை மற்றும் பார்கள், இறைச்சி கூடங்கள் உள்ளிட்ட திருக்கோயிலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் தொழில் தொடங்க அனுமதி அளிக்கப்பட மாட்டாது.
19. மனையில் மேல்பலன் தரும் மரங்கள் வைத்து பலன் பெறக்கூடாது. ஏலம் எடுத்தவர் மேற்படி இடத்தினை உள் வாடகைக்கு விடக்கூடாது.
20. 5 ஆண்டு குத்தகை காலம் முடிவுற்ற நிலையில் இடத்தினை காலி செய்து திருக்கோயில் வசம் ஒப்படைக்க வேண்டும். ஏலகாலம் முடியும் தேதியில் சொத்தின் சுவாதீனம் திருக்கோயில் வசம் தானாகவே வந்துவிடும். இதற்காக தனி அறிவிப்பு வழங்கப்படமாட்டாது.
21. 5 ஆண்டு காலம் முடிவுற்றதும் மேற்படி இடம் திருக்கோயில் வசம் தானாகவே வந்துவிடும்.
22. திருக்கோயிலுக்கு குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள், திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மேற்படி பொது ஏலம் / மறு டெண்டரில் கலந்துகொள்ள அனுமதியில்லை.
23. திருக்கோயில் நிபந்தனைகளை முழுவதும் தெரிந்து மறு டெண்டர் / பொது ஏலத்தில் கலந்து கொண்டதாக கருதப்படும்.
24. ஏலம் / மறு டெண்டர் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் கூட்டவோ, குறைக்கவோ, திருத்தவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு. ஏலம் தொடர்பாக சந்தேகங்கள் இருந்தால் திருக்கோயில் நிர்வாகம் அளிக்கும் விளக்கங்களே முடிவானதாகும்.
25. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

நிர்வாகி
ஸ்ரீகத்ரி தயாராம் சிவ்ஜி கட்டளை
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம்